**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.1057/2024 நாள்- 08.04.2026

**வா.சா.1. சீதாலட்சுமி என்ற கீதா**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

எனக்கு சொந்த ஊர் முத்தாநதி, என்னை சிவகிரியில் திருமணம் செய்து கொடுத்துள்ளார்கள். எனக்கு திருமணமாகி சுமார் 16 வருடங்களுக்கு மேல் இருக்கும். எனக்கு எழுதப்படிக்கத் தெரியாது. நீதிமன்றத்திற்கு நான் மட்டும் தான் வந்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு என் வழக்கறிஞருக்கு நான்தான் தகவல் சொன்னேன். தாவா சொத்தை யாரிடமிருந்து கிரையம் பெற்றேன் என்று கேட்டால் அவரது பெயர் எனக்கு தெரியாது. சங்கவநாயக்கர், வேலம்மாள் ஆகியோரிடமிருந்து கிரையம் பெற்றோம் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் வாங்கும் போது சீதாலட்சுமி என்று குறிப்பிட்டு கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சீதாலட்சுமி என்ற கீதா என்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் ஆனால் என் பெயர் கீதா தான். என் பெயர் கீதா என்பதற்கு பதிலாக சீதாலட்சுமி என்று ஆதார் கார்டை திருத்தம் செய்ய சொல்வது சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். யாரிடம் புகார் கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் தவறுதலாக ஆவணம் பதிவு செய்யவில்லை என்றும் என்னுடைய ஆதார் கார்டிலேயே சீதாலட்சுமி தான் உள்ளது என்றும், எனக்கு தெரிந்து தான் தானஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போன்று எந்த புகாரும் எந்த அதிகாரியிடம் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதுவதற்கு பிரதிவாதி தான் என்னை அழைத்து சென்றார். தானசெட்டில்மெண்ட் எழுத வேண்டும் என்று என்னை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் அடமானம் எழுத வேண்டிதான் என்னை அழைத்து சென்றார்கள். என் சீதாலட்சுமி என்று கையொப்பம் போடச்சொல்லி கட்டாயப்படுத்தினார்கள் என்பதற்கும் என் பெயர் கீதா என்பதை மாற்றி சீதாலட்சுமி என்று கூறச்சொன்னார்கள் என்று சார்பதிவாளரிடம் சொன்னேனா என்று கேட்டால் பிரதிவாதி என்னை கூறக்கூடாது என்று கூறிவிட்டார். இந்த விவரத்தை

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு காவல் நிலையத்தில் உடனடியாக புகார் கொடுத்தேன் ஆனால் பிரதிவாதி விசாரணைக்கு வரவில்லை. எந்த காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்று கேட்டால் ஞாபகம் இல்லை. நான் சொல்வது போன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் புகாரும் கொடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2- ஆவணத்தின் மூலம் கிரையம் வாங்கிய சொத்தை நான்தான் எனக்குரிய பாதி பாகத்தை என் விருப்பத்தின் பெயரில் தான் பிரதிவாதிக்கு தானமாக எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் அப்பா பெயர் பரமசிவம். வா.சா.ஆ.2-ல் பரமசிவம் மகள் சீதாலட்சுமி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அப்பா, என் திருமணத்திற்கு முன்பாகவே இறந்துவிட்டார். என் அப்பா இறந்த பிறகு என் தாயார் வயதானவராக இருந்தார் என்றால் சரிதான். என் அம்மா வீட்டிற்குள் வேலை பார்த்து வருகிறார். என் சகோதரி வேலை பார்க்கவில்லை நான்தான் வேலை பார்த்தேன். என் அப்பா இறக்கும் போது எனக்கு சிறிய வயது என்றும் என் சகோதரி தான் வேலை பார்த்து எங்களை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. இந்திய தனிப்பட்ட அடையாள ஆணையத்தால் வழங்கப்பட்ட நிரந்தரமான ஆவணம் தான் ஆதார் அட்டை என்றால் சரிதான் சம்பந்தபட்ட நபர் நேரில் சென்று தான் பெயர் மாற்ற முடியும் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போன்று பிரதிவாதி என் பெயரை அடையாள அட்டையில் மாற்றவில்லை என்றும் என் பெயர் சீதாலட்சுமி தான் என்றும் நான்தான் என்னுடைய அடையாள அட்டையை வழங்கி பிரதிவாதிக்கு தானமாக எழுதிக் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1-ல் சாட்சி கையொப்பம் செய்த சீனிவாசன், முத்துராமலிங்கம் ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி கையொப்பம் செய்த நபர்களுக்கும் எனக்கும் எந்தவித விரோதமும் இல்லை. முத்தாநதி கிராமத்தை சேர்ந்த கருப்பையா, தேவசகாயம் மற்றும் எனக்கும் விரோதம் கிடையாது. தாவா சொத்தில் தூர்ந்து போன கிணறு இருந்தது. அந்த கிணற்றை ஆழப்படுத்தி மின்மோட்டார் அமைத்து என் சகோதரி விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கு என்சகோதரி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். கிணற்றில் மின் மோட்டார் அமைப்பதற்கு நான் ஆட்சேபணை இல்லை என்று

| |
|---|
| சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.<br><br>ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,<br>இராஜபாளையம். |

கடிதம் எழுதிக் கொடுத்தேனா என்று கேட்டால் இல்லை. சாட்சிகள் கருப்பையா தேவசகாயம் ஆகியோர்கள் முன்பாக நான் ஆட்சேபணை இல்லை என்று கடிதம் எழுதிக் கொடுத்தேன் என்றும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரி பெயருக்கு பட்டா மாற்றம் செய்த விவரம் பட்டா மாற்றிய 1 மாதத்தில் தெரியும். பிரதிவாதி பெயரில் பட்டா மாற்றம் செய்த பின்பு அந்த பட்டாவை ரத்து செய்வதற்கு மனு கொடுத்துள்ளேன். அந்த மனு கொடுத்தது சம்பந்தமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்கள் என் சகோதரியின் அனுபவத்தில் உள்ளது என்றால் நானும் அனுபவம் செய்து வருகிறேன். தாவா சொத்தை நான் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்றும் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2- கிரைய ஆவணத்தை என் சகோதரி தான் எழுதினார் என்ற விவரத்தை என்னுடைய பிராதில் கூறவில்லை . வா.சா.ஆ.1- ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1- செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கேட்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனு மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று கேட்டால் விசாரித்தார்கள் அதனால் நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துவிட்டேன் அந்த விசாரணையில் என்ன உத்தரவு போடப்பட்டது என்றால் உத்தரவு போடப்பட்டுள்ளது. அந்த உத்தரவு நகலை தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.5 முதல் 7 வரையிலான ஆவணங்களுக்கு நான் தகவல் கூறவில்லை. தாவா சொத்தில் எனக்கு பாதி பங்கு உள்ளது என்று விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். பாதி பாகத்தை எனக்கு ஒப்படைக்க வேண்டும் என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். நான் விருப்பப்பட்டு தான் வா.சா.ஆ.1- தானப்பத்திரத்தை என் சகோதரிக்கு எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1- தானத்தை சகோதரி ஏற்றுக் கொண்டு பட்டா பெயர் மாற்றம் செய்து வரி செலுத்தி விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. என் சகோதரிக்கு நானாக தானப்பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு அதற்கு விரோதமாக தானம் எழுதிக் கொடுக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எழுதிக் கொடுத்த பத்திரத்திற்கு முரண்பட்டு இந்த வழக்கில் பரிகாரம் கேட்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

**செய்யக்கூடியது என்றால் சரியல்ல. ஆதார் கார்டு வழங்கிய அதிகாரிகளை விசாரித்தால் நான் பெயர் மாற்றம் செய்தேனா அல்லது பிரதிவாதி பெயர் மாற்றம் செய்தார்களா என்று உண்மை தெரிய வரும் என்றால் சரிதான் அந்த அதிகாரியை நான் விசாரிக்க தயாராக உள்ளேன்.**

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.